செ.வெ.எண்: 35 நாள்: 22.03.2017

**அரியலூர் மாவட்டத்தில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு மங்கலம் ஏரியில் ஆழப்படுத்தும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், தண்டலை ஊராட்சியில் **உலக தண்ணீர் தினத்தை** முன்னிட்டு மழைநீர் சேகரிக்கும் வண்ணம் **மங்கலம்** ஏரி ஆழப்படுத்தும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (22.03.2017) தொடங்கி வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

அரியலூர் மாவட்டம், ஜெங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தண்டலை கிராமத்தில் உள்ள 6.35 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட மங்கலம் ஏரியை 16 நபர்கள் சுமார் 3.95 ஹெக்டேர் நிலப்பரப்பினை விவசாயம் செய்து ஏரியினை ஆக்கிமிப்பு செய்து வந்ததை கண்டறியப்பட்டு, ஆக்கிரமிப்பு பகுதியை அனைத்தும் மாவட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, ஜெயங்கொண்டம் ஒன்றியத்திற்குட்பட்ட மங்கலம், வடவீக்கம், கல்லாதூர், தண்டலை ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 400-க்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்கள் விவசாயம் செய்வதற்கு ஏதுவாக **உலக தண்ணீர் தினத்தை** முன்னிட்டு மங்கலம் ஏரி ஆழப்படுத்தும் பணி இன்று (22.03.2017) தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இப்பணியினை ஊரக வளர்ச்சித்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களைக் கொண்டு பணிகள் துரிதமாக மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தனசேகரன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமைத் திட்டம் திருமதி.லோகேஸ்வரி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.கதிரேசன், மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**